

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.06.2026) சென்னை S.I.E.T. ஸ்போர்ட்ஸ் பெவிலியன் வளாகத்தில் நடைபெற்ற மருத்துவர் பி. பஷீர் அகமது அவர்களின் மகள் டாக்டர் பி.ரீஷ்மான் ஃபஹ்மிதா – டாக்டர் எம்.ஷாஃபயாஸ் ஆகியோரின் திருமண விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.




சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில், நேற்று (27.06.2026) மாலை GenZ DMK கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி, அண்ணா நகர், ஆயிரம் விளக்கு, தியாகராயர் நகர், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 27 வயதுக்குட்பட்ட இளம் தலைமுறையினர் பங்கேற்றனர். இந்நிகழ்வின் போது 'படம் பார்த்து கதை சொல்லு', போலி செய்திகளை வெளிப்படுத்தி, உண்மையை சரிபார்க்க Fact check, சமகால அரசியலைப் பகடி செய்யும் Sofa–பேரவை, அரசியல் பதிவுகளை சமூக வலைதளத்தில் வெளிப்படுத்தும் வகுப்பு எனப் பல்வேறு தலைப்புகளின் கீழ் நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சி, எழுச்சியுடன் நடைபெற்றது.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாரியம்மன் மற்றும் விநாயகர் கோவில்களின் கருவறையில் முதல்வர் ஜோசப் விஜய் படத்தையும் வைத்து த.வெ.க.வினர் சிறப்பு பூஜை நடத்தியிருக்கிறார்களே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; நடிகராக இருந்து நாடாள வந்தவரை.கோவில் கருவறையில் வைத்துக் கும்பிட்டு வழிபாடு செய்யும் பகுத்தறிவுக்குக் கொவ்வாத கோமாளித் தனத்தை. சேலம் பெரியார் ஜி.பி. சோம சுந்தரம் அவர்கள் பார்க்க நேரிட்டிருந்தால், இரத்தக் கண்ணீரே சிந்தியிருப்பார் !**

**சேலம் பெரியார் சோமசுந்தரம் அவர்களைப் பற்றி, "கழகம் என்றால் துடிதுடிப்பான வாலிபர்கள் மட்டும் கொண்டது இல்லை; அனுபவமும் வயதும் மிக்க சோமசுந்தரம் போன்றவர்களையும் கொண்டது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது நினைவுகூரத்தக்கது !**

